பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

"நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்" (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 20 முஹர்ரம்- 1434 நவம்பர், 2012

## அல்லாஹ்வின் மாதம் முஹர்ரம்

'அல்லாஹ்வின் மாதம்' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் வர்ணிக்கப்பட்ட முஹர்ரம் மாதம் மலர்ந்திருப்பதோடு, இஸ்லாமியப் புதுவருடம் 1434 உதயமாகியிருக்கிறது. இஸ்லாமியப் புது வருடப் பிறப்பிற்கென விசேடமான கொண்டாட்டங்கள் எதுவும் இஸ்லாத்தில் இல்லை. ஆயினும் இஸ்லாமிய வருடக் கணிப்பிற்கு ஒரு வரலாறு இருக்கிறது.

நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் காலத்திலும் அவர்களுக்குப் பின்வந்த கலீபா அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்களின் காலத்திலும் வருடக் கணிப்பானது யானைப் படையினரின் வருகை, சூரிய கிரகணம், நபித்துவம் போன்ற முக்கிய நிகழ்வுகளை மையமாக வைத்தே மேற்கொள்ளப்பட்டது.

ஆயினும் இரண்டாவது கலீபா உமர் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் முஸ்லிம்களுக்கென்று தனித்துவமான ஆண்டுக் கணிப்பு இருக்க வேண்டும் எனக் கருதி, ஸஹாபாக்கள் பலரை அழைத்து கலந்துரையாடிய போது பலரும் பல்வேறு கருத்துகளை முன்வைத்தார்கள். நபியவர்களின் பிறப்பை ஆரம்பமாகக் கொண்டு வருடத்தைக் கணிக்கலாம் என்று சிலரும், நபியவர்களுக்கு நபித்துவம் கிடைத்த ஆண்டை முதல் ஆண்டாகக் கொண்டு வருடத்தைக் கணிக்கலாம் என்று சிலரும் கூற, மற்றும் சிலரோ நபியவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு மேற்கொண்ட ஹிஜ்ரத் பயணமே இஸ்லாம் உலகெங்கும் பரவ காரணமாக இருந்தமையால் அப்பயணத்தை அடிப்படையாகக் கொண்டு வருடத்தைக் கணிக்கலாம் என்று கூறியதும், அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றிலிருந்து நபியவர்கள் ஹிஜ்ரத் மேற்கொண்ட ஆண்டை முதல் ஆண்டாகக் கொண்டு இஸ்லாமிய ஆண்டு கணிக்கப்படுகிறது.

### தாஸூஆ, ஆஷூரா நோன்புகள்

துல்க.்.தா, துல்ஹிஜ்ஜா, முஹர்ரம், றஜப் ஆகிய நான்கு புனிதமான மாதங்களுள் ஒன்றான இம் மாதத்தில் நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான அமல் முஹர்ரம் மாதத்தின் 9ம் நாளிலும் 10ம் நாளிலும் நோன்பு நோற்பதாகும். ஒன்பதாம் நாள் நோன்பு தாஸூஆ நோன்பு என்றும் பத்தாம் நாள் நோன்பு ஆஷூரா நோன்பு என்றும் அழைக்கப்படுகின்றன. 'றமழான் நோன்புக்குப் பின்னர் மிகச் சிறந்த நோன்பு அல்லாஹ்வின் மாதமான முஹர்ரம் மாதத்தில் நோற்கும் நோன்பாகும்' என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள் (முஸ்லிம்).

இப்னு அப்பாஸ் றழியல்லாஹுஅன்ஹுமா அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் ஹிஜ்ரத் மேற்கொண்டு மதீனாவுக்கு சென்ற போது அங்கு வாழ்ந்த யூதர்கள் முஹர்ரம் மாதத்தின் 10ம் நாளில் நோன்பு நோற்றிருந்தார்கள். அதற்கான காரணத்தை நபியவர்கள் யூதர்களிடம் வினவிய போது, அத்தினத்தில்தான் தங்களது நபியாகிய மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் பிர்அவ்னின் கொடுமைகளில் இருந்து பாதுகாக்கப்பட்டதாகவும், அதை நினைவு கூரும் முகமாகவே நோன்பு நோற்பதாகவும் யூதர்கள் கூறிய போது நபியவர்கள் 'அவ்வாறாயின் அத்தினத்தில் நோன்பு நோற்பதற்கு நாங்கள் மிகவும் தகுதியானவர்கள்' என்று கூறி, முஹர்ரம் மாதம் 10ம் நாளில் தானும் நோன்பு நோற்றதோடு, பிறரையும் அத்தினத்தில் நோன்பு நோறகுமாறு கட்டளையிட்டார்கள் (புஹாரி, முஸ்லிம், அபூதாவூத்). றமழான் மாத நோன்பு கடமையாக்கப்படும் வரை ஆஷூரா நோன்பு நோற்பது முஸ்லிம்களுக்கு கடமையாக இருந்தது.

ஹிஜ்ரி 2ம் ஆண்டு றமழான் நோன்பை அல்லாஹ் கடமையாக்கிய போது நபியவர்கள் ஆஷூரா நோன்பை ஸுன்னத்தாக ஆக்கினார்கள். ஒரு தடவை நபியவர்கள் ஆஷூரா தினத்தில் பின்வருமாறு குறிப்பிட்டதாக முஆவியா றழியல்லாஹுஅன்ஹுஇவ்வாறு கூறினார்கள்: நான் இன்றைய தினம் (ஆஷூரா தினம்) நோன்பு நோற்றிருக்கிறேன். விரும்பியோர் இத்தினத்தில் நோன்பு நோற்கவும் (முஸ்லிம், நஸாஈ). இதிலிருந்து இந்த நோன்பு ஸுன்னத்தான நோன்பு என்பது புலனாகிறது. ஆயினும் இதே ஆஷூரா நோன்பை அன்றைய யூதர்களும் நோற்றமையால் அவர்களுக்கு மாறுசெய்ய வேண்டும் எனக் கருதி, முஹர்ரம் மாதம் ஒன்பதாம் நாளிலும் பத்தாம் நாளிலும் நோன்பு நோற்குமாறு வலியுறுத்தினார்கள்.

றமழான் மாத நோன்புக்கு அடுத்தபடியாக சிறப்புக்குரிய நோன்பு எது என நபியவர்களிடம் ஸஹாபாக்கள் வினவிய போது 'அல்லாஹ்வின் மாதமான முஹர்ரம் மாதத்தில் நோற்கும் நோன்பு' என குறிப்பிட்டார்கள் (ஸஹீஹ் முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்). ஆஷூரா நோன்பின் சிறப்புக் குறித்து நபியவர்களிடம் வினவப்பட்ட போது 'அது கடந்த வருட பாவங்களுக்கு குற்றப்பரிகாரமாக அமையும்' என குறிப்பிட்டார்கள் (ஸஹீஹ் முஸ்லிம்). மற்றுமொரு தடவை நபிகளார் குறிப்பிட்டார்கள்: 'நான் அடுத்த வருடம் உயிருடன் இருந்தால் (முஹர்ரம் மாதம்)

ஒன்பதாம் நாளிலும் நோன்பு நோற்பேன்' (ஸஹீஹ் முஸ்லிம்).

அதே நேரம் ஒன்பதாம், பத்தாம் தினங்களில் நோன்பு நோற்க முடியாவிட்டால் பத்தாம் நாளிலும் பதினோராம் நாளிலும் நோன்பு நோற்க வேண்டும் என்ற கருத்து பலரிடம் காணப்படுகிறது. இது தொடர்பாக முஸ்னத் அஹ்மத், இப்னு ஹுஸைமா ஆகிய ஹதீஸ் நூல்களில், 'பத்தாம் நாளுக்கு முன்னுள்ள ஒன்பதாவது நாளில் அல்லது பத்தாம் நாளுக்குப் பின்னுள்ள பதினோராம் நாளில் நோன்பு நோற்றுக்கொள்ளுங்கள்' என்று ஒரு ஹதீஸ் காணப்படுகிறது. ஆயினும் இந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர்களுள் ஒருவரான இப்னு அபீ லைலா என்பவர் பலவீனமானவர் என்பதால் இந்த ஹதீஸ் பலவீனமானது என பிரபல ஹதீஸ்கலை ஆய்வாளர்களான இமாம் நாஸிருத்தீன் அல்பானி, ஷுஐபுல் அர்னஊத், அப்துல்லாஹ் அல்பவ்ஸான் ஆகியோர் குறிப்பிடுகின்றனர். இதன் அடிப்படையில் ஒன்பதாம் நாளிலும் பத்தாம் நாளிலும் நோன்பு நோற்பதே சரியான முடிவாகும்.

முஹர்ரம் மாதம் ஒன்பதாம், பத்தாம் தினங்களில் நோன்பு நோற்குமாறு மார்க்கம் வலியுறுத்துவதை ஒதுக்கிவிட்டு, சமூகத்திலுள்ள சிலர் ஹுஸைன் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் கொலை செய்யப்பட்டதற்காக படுகொலை கத்தம் என்ற பெயரில் இத்தினங்களில் உண்டு களிப்பதைப் பார்க்கிறோம். நபிகளாரின் பேரன்புக்குரிய பேரரான ஹுஸைன் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் முஹர்ரம் மாதம் பத்தாம் நாள் கர்பலா களத்தில் கொலை செய்யப்பட்டமை முஸ்லிம்களைப் பொறுத்தவரை ஒரு துன்பமான நிகழ்வு என்பதில் அணுவளவும் ஐயமில்லை. ஹுஸைன் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் இவ்விதம் கொலை செய்யப்படுவார்கள் என்று நபியவர்கள் முன்னறிவிப்பும் செய்திருந்தார்கள். அவ்வாறிருந்தும் இத்தினங்களில் நோன்பு நோற்குமாறு நபியவர்கள் வலியுறுத்தியிருப்பதை முற்றாகப் புறக்கணித்து, கத்தம் என்ற பெயரில் இத்தினங்களில் உண்டு களிப்பது வழிகேடன்றி வேறில்லை. இவ்வாறு கத்தம் ஓதுகின்ற நிகழ்வை உருவாக்கியவர்கள் ஷீஆக்கள் எனப்படும் வழிதவறிய ஒரு கூட்டத்தினர் என்பதை அதிகம் பேர் அறியாதிருக்கிறார்கள்.

இதே வேளை முஸ்லிம் சமூகத்திலுள்ள மிக அதிகமானவர்கள் இஸ்லாமிய வருடம் பற்றியோ, இஸ்லாமிய மாதங்கள் பற்றியோ எதுவும் அறியாதிருக்கிறார்கள். ஆங்கில மாதங்களையும் தமிழ் மாதங்களையும் சரியாகச் சொல்லத் தெரிவது போன்று இஸ்லாமிய மாதங்களை சொல்லத் தெரிவதில்லை. பெரும்பாலான பாடசாலைகளில் கூட பிள்ளைகளுக்கு ஆங்கில மாதங்களும் தமிழ் மாதங்களும் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன.

வீடுகளில் கூட பிள்ளைகளுக்கு இஸ்லாமிய மாதங்கள் பெற்றோரால் சொல்லிக்கொடுக்கப்படுவதில்லை. ஆனால் நூற்றுக்கணக்கான படங்களினதும் நடிகர் நடிகையரினதும் விளையாட்டு வீரர்களினதும் பெயர்களை தடுமாற்றம் ஏதுமின்றி ஒப்புவிக்கும் ஆற்றலை ( ? ) இளஞ் சிறார்கள் கூட பெற்றிருக்கிறார்கள். நமது இஸ்லாமிய உணர்வும் பற்றும் எங்கோ காணாமல் போய்விட்டன.

எனவே, மேற் குறிப்பிடப்பட்ட இஸ்லாமிய வருடக் கணிப்பின் பின்னணியிலுள்ள வரலாற்றையும் இஸ்லாமிய மாதங்களையும் நாமும் கற்று நமது பிள்ளைகளுக்கும் கற்றுக்கொடுத்து இஸ்லாமிய உணர்வை உள்ளங்களில் ஆழமாகப் பதித்துக்கொள்வதோடு, எதிர்வரும் முஹர்ரம் ஒன்பதாம், பத்தாம் தினங்களில் நோன்பு நோற்று கடந்த வருடத்தில் நாம் செய்த பாவங்களுக்கான மன்னிப்பையும் இறையருளையும் பெற்றுக்கொள்வோமாக.

# நபி வழியில் நம் தொழுகை

-ஹாபிழ் ARM. றிஸ்வான்-

- தொடர் 10

**(கடந்த இதழில் ஸுஜூத், நடு இருப்பு ஆகிய நிலைகளில் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது)**

### 17) இரண்டாவது றக்அத்

- நபியவர்கள் இரண்டாவது றக்அத்துக்கு வந்துவிட்டால் தாமதிக்காமலே ஸூரதுல் பாதிஹாவை ஓத ஆரம்பித்து விடுவார்கள் (முஸ்லிம், அபூஅவானா)
- பின்னர் முதலாவது றக்அத்தை நிறைவேற்றியது போன்றே இரண்டாவது றக்அத்தையும் நிறைவேற்றுவார்கள்.

### 18) முதலாவது அத்தஹிய்யாத் (தஷஹ்ஹுத்)

- இரண்டாவது றக்அத்தின் முடிவில் முதலாவது அத்தஹிய்யாத்துக்காக அமர்ந்து அத்தஹிய்யாத் ஓதுவார்கள்.
- நபியவர்கள் அத்தஹிய்யாத்துக்காக அமர்ந்தால் தமது வலது உள்ளங்கையை வலது தொடையிலும் (மற்றுமோர் அறிவிப்பில் வலது முழங்காலிலும்) இடது உள்ளங்கையை இடது தொடையிலும் (மற்றுமோர் அறிவிப்பில் இடது முழங்காலிலும்) வைப்பார்கள் (முஸ்லிம், அபூஅவானா)
- நபியவர்கள் தமது முழங்கையின் ஓரத்தை தமது வலது தொடைக்கு மேலே வைத்துக் கொள்வார்கள்.(அதாவது தமது முழங்கையை விலாவை விட்டும் விலக்கி வைக்காமல் விலாவுக்கு நெருக்கமாக வைப்பார்கள்). (அபூதாவூத், நஸாஈ)
- இரு வகையான இருப்புக்களை நபியவர்கள் தடை செய்தார்கள்.



I **நாய் உட்கார்வது போன்று உட்கார்தல்.**
(ஒருவர் தனது பின்பகுதியை நிலத்தோடு சேர்த்து வைத்து இரு கெண்டைக்கால்களையும் நட்டி வைத்து இரு கைகளையும் நிலத்தில் ஊன்றியவாறு (நாய் அமர்வது போன்று) இருக்கும் இருப்பை தடுத்தார்கள். (முஸ்னதுத் தயாலிஸீ, முஸ்னத் அஹ்மத்)

II **யூதர்களின் இருப்பு**
இடது கையை நிலத்தில் ஊன்றியவாறு அமர்வதையும் நபியவர்கள் தடுத்தார்கள். இவ்வாறு நிலத்தில் இடது கையை ஊன்றிய வண்ணம் அமர்ந்திருப்பது யூதர்களின் இருப்பு என்று நபியவர்கள் குறிப்பிட்டார்கள் (பைஹகீ, ஹாகிம்).

-இன்ஷாஅல்லாஹ் தொடரும்


**வெளிநாட்டுப் பயணச் சீட்டுகளை குறைந்த விலையில் பெற...**

கட்டார், டுபாய், ஸஊதி அரேபியா, குவைத், இந்தியா போன்ற மற்றும் பல வெளிநாடுகளுக்குச் செல்வதற்கான பயணச் சீட்டுகளை மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**ஹபீழ் டிகெடிங் ஏஜென்ட்**

568/1/9, முதலாம் மாடி, மருதானை, கொழும்பு 10

ஏறாவூரில் தொடர்பு கொள்ள : 077 8088030

# ஒரு முஸ்லிமின் கொள்கை – 01

- அபூ ஸைனப்

மனித இனத்தைப் படைத்து இப்பூமியில் வாழவைத்த ஏக இறைவனான அல்லாஹ், தெளிவான கொள்கை உறுதியுடன் வாழுமாறு மனிதனைப் பணித்தான். கொள்கைத் தெளிவுடன் கூடிய சமூகத்தை உருவாக்குவதற்காக அல்லாஹ் இப்பூமியில் இறைத்தூதர்களை அனுப்பி வைத்தான்.

முதல் மனிதரான ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தொடக்கம் இறுதி இறைத்தூதரான முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வரை இம்மண்ணில் தோன்றிய அத்தனை நபிமார்களும் இறைவன் பற்றிய கொள்கைப் பிரகடனத்தை தம் சமூகத்தின் முன்னால் உறுதியுடன் முன்வைத்தார்கள். ஓரிலட்சத்துக்கும் மேற்பட்ட நபிமார்கள் தம் சமூகத்தாருக்கு முன்வைத்த கொள்கைப் பிரகடனம் ஒன்றாகவே இருந்தது.

வணக்க வழிபாடுகளைப் பொறுத்தவரை ஒவ்வொரு நபியின் சமூகத்தாருக்கிடையில் வேறுபாடுகள் இருந்தன. ஒரு நபியின் சமூகத்தில் காணப்பட்ட வணக்க வழிபாட்டு முறை மற்றுமொரு நபியின் சமூகத்தில் இருக்கவில்லை. இவ்வாறே சட்ட திட்டங்கள், நடைமுறைகள், பண்பாடுகள் போன்றவற்றிலும் ஒரு நபியின் சமூகத்திற்கும் மற்றுமொரு நபியின் சமூகத்திற்குமிடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. ஆனால் கொள்கை விடயத்தில் மாத்திரம் எந்தவொரு நபிக்கும் ஒரு சிறிதளவும் வேறுபாடு காணப்படவில்லை. அனைத்து நபிமார்களும் போதித்த கொள்கை ஒன்றுதான். அந்த மாறாத கொள்கை என்னவென்றால், அல்லாஹ்வை மாத்திரம் ஒரே இறைவனாக ஏற்று, அவனுக்கு மாத்திரம் அனைத்து வணக்க வழிபாடுகளையும் நிறைவேற்றி அவனுக்கு கட்டுப்பட்டு வாழ்வது என்பதே அக்கொள்கையாகும். இக்கொள்கையைத்தான் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற வாக்கியம் உள்ளடக்கி வைத்திருக்கிறது.

அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான்: 'அல்லாஹ்வையே வணங்குங்கள், (அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படும்) அனைத்து ஷைத்தானிய வழிபாட்டையும் தவிர்ந்துகொள்ளுங்கள் எனக் கூறுவதற்காக நிச்சயமாக நாம் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு தூதரை அனுப்பிவைத்தோம்' (16 : 36).

மேலும் அல்லாஹ் கூறுகிறான்: 'நிச்சயமாக என்னைத் தவிர வணங்குவதற்குரிய வேறு நாயன் இல்லை, எனவே என்னையே வணங்குங்கள் என்று வஹி அறிவித்தே உமக்கு முன்னர் தூதர்களை நாம் அனுப்பிவைத்தோம்'(21 : 25).

எனவே லாஇலாஹ இல்லல்லாஹ் என்பது ஒரு வெற்று வாக்கியமல்ல, ஒரு மாபெரும் கொள்கையை தன்னகத்தே உள்ளடக்கியிருக்கும் மாபெரும் பிரகடனமாகும். லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற இந்த தாரக மந்திரம்தான் உலகில் தோன்றிய அனைத்து நபிமார்களினதும் கொள்கைப் பிரகடனமாக இருந்தது.

இக்கொள்கைப் பிரகடனத்தை மொழிந்ததற்காகத்தான் நபிமார்கள் தம் சமூகத்தாரால் சொல்லொணாத் துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள். வணக்க வழிபாடுகளை அறிமுகப்படுத்தியதற்காகவோ, குற்றச் செயல்களை ஒழிப்பதற்காக பாடுபட்டதற்காகவோ நபிமார்கள் தம் சமூகத்தாரினால் துன்புறுத்தலுக்கு உள்ளாகவில்லை. நூஹ் நபி அவர்கள் இராப் பகலாக துன்புறுத்தப்பட்டதும், இப்றாஹீம் நபி அவர்கள் நெருப்பில் தூக்கி வீசப்பட்டதும், மூஸா நபியவர்கள் பிர்அவ்னின் துயரங்களுக்குள்ளானதும், மற்றும் சில நபிமார்கள் நட்டி வைக்கப்பட்டு இரண்டாகப் பிளக்கப்பட்டதும், இன்னும் சில நபிமார்கள் சமூகத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டதும் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற இக்கொள்கைப் பிரகடனத்தை சமூகத்தின் முன் மொழிந்ததற்காகத்தான்.

நமது நபி முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கல்லெறிக்குட்பட்டு இரத்தம் கசிந்ததும் சிறுவர்களால் துரத்தப்பட்டதும் அழுகிய ஒட்டகக் குடல்கள் அவர்களது மேனியெங்கும் வீசப்பட்டதும் ஊர்ப் பகிஷ்காரம் செய்யப்பட்டதும் இக்கொள்கைப் பிரகடனத்தை நெளிவு, சுளிவுகள் இன்றி வளைந்து கொடுக்காது உரத்து மொழிந்ததற்காகத்தான். ஆட்சி அதிகாரத்தைக் கோரியதற்காகவோ, வணக்க வழிபாடுகளை அறிமுகப்படுத்தியதற்காகவோ அல்ல. இக்கொள்கைப் பிரகடனத்தை உறுதிபட ஏற்று, அதை வாழ்வில் நடைமுறைப்படுத்தும் கொள்கைவாத சமூகமொன்றை நபியவர்கள் உருவாக்கினார்கள். ஆட்சியும் அதிகாரமும் அவர்களது காலடிக்கு வந்தது. அதன் பின்னர் தொழுகை உள்ளிட்ட வணக்க வழிபாடுகளையும் சட்ட திட்டங்களையும் குற்றவியல் சட்டக் கோவையையும் அந்த சமூகத்தில் அறிமுகப்படுத்துவது நபியவர்களுக்கு மிக இலகுவாயிற்று.

நபிகளாரின் வார்ப்பில் உருவான ஆண் ஸஹாபாக்களும் பெண் ஸஹாபிய்யாக்களும் சுடுமணலில் கிடத்தப்பட்டு வேதனை செய்யப்பட்டார்கள். உடல் இரண்டாகக் கிழிக்கப்பட்டார்கள். கழுமரம் ஏற்றிக் கொலை செய்யப்பட்டார்கள். அடித்து விரட்டப்பட்டார்கள். ஏன் இந்த சோதனை? ஏன் இந்த சித்திரவதை? லாஇலாஹ இல்லாஹ் என்ற கொள்கைப் பிரகடனத்தை உரக்க மொழிந்தது மட்டுமன்றி அதில் பற்றுறுதியோடும் இருந்தார்கள். எப்படித் தெரியுமா? அல்லாஹ்வை மாத்திரம் இறைவனாக ஏற்றுக்கொண்டார்கள். அவனுக்கு மாத்திரம் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றுவோம் என்றார்கள். அந்த அல்லாஹ்விடம் மாத்திரம் நாம் உதவி தேடுவோம் என்றார்கள். அவனைத் தவிர வேறு எந்த சிலையிடமோ, மண்ணறைகளில் அடக்கம் செய்யப்பட்டவர்களிடமோ சென்று கஷ்டங்களையும் தேவைகளையும் முறையிட்டு பிரார்த்திக்க மாட்டோம் என்றார்கள். அல்லாஹ்விடம் மாத்திரமே பிரார்த்திப்போம் என்றார்கள். அந்த அல்லாஹ்வின் பெயராலேயே நேர்ச்சையை நிறைவேற்றுவோம் என்றார்கள். அவனுடைய பெயர் கூறி அவனுக்காக மாத்திரமே பிராணிகளை அறுத்துப் பலியிடுவோம் என்றார்கள். அவனுடைய பெயரை மாத்திரம் கூறி சத்தியம் செய்வோம் என்றார்கள்.

இவ்வாறு அவர்கள் உதடுகளினால் கூறியது மட்டுமல்ல, அதை நடைமுறைப்படுத்திக் காட்டினார்கள். இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு கற்சிலைகளிடமும் மண்ணறைகளில் அடக்கம் செய்யப்பட்ட நல்லடியார்களிடமும் சென்று பிரார்த்தித்தவர்கள், நேர்ச்சைகளை நிறைவேற்றியவர்கள், பெரியார்களின் அடக்கத்தலங்களுக்குச் சென்று அப் பெரியார்களின் பெயர் கூறி அறுத்துப் பலியிட்டவர்கள், 'க.்.பாவின் மீது சத்தியமாக' என்றெல்லாம் படைப்பினங்களின் பெயர் கூறி சத்தியம் செய்தவர்கள், இக் கொள்கைப் பிரகடனத்தைப் பொருளுணர்ந்து ஏற்றுக்கொண்டவுடன் ஏக இறைவன் அல்லாஹ்வுக்காக என்று அனைத்தையும் மாற்றிக்கொண்டார்கள்.

இதுதான் லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற இக்கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் விதமாகும். எனவே, உதடுகளால் இவ் உயர்ந்த கலிமாவை உச்சரித்துவிட்டால் மட்டும் போதாது, ஸஹாபாக்கள் நடைமுறைப்படுத்திக் காட்டியது போன்று நடைமுறைப்படுத்துவதே உண்மை முஸ்லிம்களின் அடையாளம் ஆகும் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது.

-இன்ஷாஅல்லாஹ் தொடரும்

# ஐயமும் தெளிவும்

**ஐயம்** : பள்ளிவாசல்களில் கப்றுகள் கட்டலாமா?

- K. **ஆதில் அஹ்மத், ஏறாவூர் 03**

**தெளிவு** : பள்ளிவாசல்கள் என்பவை அல்லாஹ்வை வணங்குவதற்காகவும் அவனிடம் பிரார்த்திப்பதற்காகவும் மற்றும் சமூகத்திற்குப் பயனுள்ள காரியங்களை மேற்கொள்வதற்காகவும் நிர்மாணிக்கப்படுகின்ற இறையில்லங்களாகும். புனிதமும் கண்ணியமும் பேணப்பட வேண்டிய பள்ளிவாசல்களுக்குள் மரணித்தவர்களை அடக்கி கப்றுகளை கட்டுவது இஸ்லாம் முற்றாகத் தடைசெய்துள்ள பாவச் செயலாகும்.

எந்த ஒரு மனிதனும் தான் கட்டிய அல்லது தான் வசிக்கின்ற வீட்டில் கப்று கட்டுவதை ஒருபோதும் விரும்பமாட்டான். தனது வீட்டினுள் கப்று அமைப்பதையே விரும்பாத போது, அல்லாஹ்வுக்குச் சொந்தமான புனிதமிக்க இறையில்லங்களுக்குள் கப்றுகளைக் கட்டுவது மிகப் பெரும் குற்றமாகும். அது அல்லாஹ்வின் அந்தஸ்தையும் அவனது மகிமையையும் குறைத்து மதிப்பிடுவதாகும். அல்லாஹ்வின் இல்லங்களுக்கு களங்கம் கற்பிக்கும் செயலாகும்.

நபியவர்கள் தான் மரணிப்பதற்கு ஐந்து தினங்களுக்கு முன்பு கூட இச்செயலை கடுமையாக எச்சரித்திருக்கிறார்கள். தங்களது நபிமாரின் கப்றுகளை வணங்குமிடங்களாக எடுத்துக்கொண்ட யூதர்களையும் கிறிஸ்தவர்களையும் அல்லாஹ் சபிப்பானாக என்று அவர்கள் செய்த செயலை நபியவர்கள் எச்சரித்தார்கள் (புஹாரி, முஸ்லிம்). மற்றுமொரு தடவை நபியவர்கள் பின்வருமாறு எச்சரித்தார்கள் : உங்களுக்கு முன் வாழ்ந்த சமூகத்தினர் தங்களது நபிமார்களினதும் நல்லடியார்களினதும் கப்றுகளை வணங்குமிடங்களாக மாற்றிக்கொண்டார்கள். எனவே நீங்கள் கப்றுகளை பள்ளிவாசல்களாக எடுத்துக்கொள்ளாதீர்கள். அதை நான் உங்களுக்கு தடைசெய்கிறேன் (முஸ்லிம்).

மேற்படி ஹதீஸ்களில் நபியவர்களின் எச்சரிக்கை கவனத்திற்கொள்ளத்தக்கதாகும். பள்ளிவாசல்கள் தனியாகவும் கப்றுகள் தனியாகவும் இருக்க வேண்டும் என்பதுதான் அவ் எச்சரிக்கையின் கருத்தாகும். கப்றுகள் பள்ளிவாசல்களாக மாறுவதும் பள்ளிவாசல்களுக்குள் கப்றுகளை அமைப்பதும் நபியவர்களின் எச்சரிக்கையை அப்பட்டமாக மீறும் செயலாகும். நபியவர்களின் இவ் எச்சரிக்கையின் பிரகாரம் கப்றுகள் அமைந்திருக்கும் பள்ளிவாசல்களுக்குள் தொழுவது தடைசெய்யப்பட்ட செயலாகும்.

பள்ளிவாசல்களுக்குள் கப்றுகளை கட்டும் இச்செயல்தான் காலப் போக்கில் அந்தக் கப்றுகளை புனிதப்படுத்தவும் பின்னர் அந்தக் கப்றுகளில் அடக்கப்பட்டிருப்பவர்களிடம் சென்று தமது தேவைகளை முறையிடவும் அவற்றை வணங்கி வழிபடவும் இட்டுச்செல்கிறது. சிலை வணக்கம் என்ற கொடிய பாவம் உருவானதற்கும் இதுவே காரணமாக அமைந்தது. உம்மு ஸலமா மற்றும் உம்மு ஹபீபா (றழியல்லாஹுஅன்ஹுமா) ஆகிய இருவரும் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் சென்ற போது அங்கே ஒரு தேவாலயத்தை கண்டதாகவும் அதில் உருவப் படங்கள் தொங்கவிடப்பட்டிருந்ததாகவும் நபியவர்களிடம் கூறிய போது அதற்கு நபியவர்கள், 'அக் காலத்தில் வாழ்ந்த ஒரு நல்லடியார் மரணித்துவிட்டால் அக்கால மக்கள் அவருக்கு ஒரு கப்ரை கட்டி அதில் ஒரு பள்ளிவாசலையும் கட்டிவிடுவார்கள். அத்தோடு அங்கே அந்த நல்லடியார்களின் உருவப் படங்களையும் தொங்கவிட்டு விடுவார்கள். இச்செயலைப் புரிந்தோர் அல்லாஹ்விடம் படைப்புகளில் மிகக் கெட்டவர்கள்'என்று கூறினார்கள் (புஹாரி, முஸ்லிம்).

நூஹ் நபியவர்களின் சமூகத்தில் வாழ்ந்த வத், ஸுவா∴, யகூத், யஊக், நஸ்ர் ஆகிய நல்லடியார்கள் மரணித்த போது அவர்களது கப்றுகளில் நினைவுச் சின்னங்களை நடுமாறும் அவற்றில் அந்நல்லடியார்களின் பெயர்களைப் பொறிக்குமாறும் ஷைத்தான் மக்களைத் தூண்டினான். நாளடைவில் கப்றிலுள்ளவர்களை மக்கள் வணங்கத் தொடங்கினார்கள் என இப்னு அப்பாஸ் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் அறிவிக்கிறார்கள் (புஹாரி).

பள்ளிவாசல்களுக்குள் கப்றுகளை அமைப்பது கூடாது எனும் போது சிலருக்கு ஒரு சந்தேகம் எழக்கூடும். அதாவது நபியவர்களின் கப்று மதீனாப் பள்ளிவாசலுக்குள்தானே இருக்கிறது, அவ்வாறாயின் அது எப்படி அனுமதிக்கப்படும்? இதற்குரிய பதிலை வழங்கிவிட்டால் அந்த சந்தேகம் நிவர்த்தியாகி விடும்.

நபியவர்கள் தனது மனைவி ஆஇஷா றழியல்லாஹுஅன்ஹா அவர்களின் வீட்டில் இருந்த போதுதான் மரணித்தார்கள். அன்னை அவர்களின் வீடு மதீனாப் பள்ளிவாசலுடன் இணைந்தே இருந்தது. நபிமார்கள் எந்த இடத்தில் மரணித்தார்களோ அந்த இடத்திலேயே அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பது மார்க்கச் சட்டமாகும். ஏனைய மனிதர்கள் போன்று அவர்கள் அடக்கம் செய்யப்படுவதற்காக வேறு இடங்களுக்கு நகர்த்தப்பட முடியாது. இதனடிப்படையில் நபியவர்கள் மரணித்த அன்னை ஆஇஷா அவர்களின் வீட்டிலேயே அடக்கம் செய்யப்பட்டார்கள். மதீனாப் பள்ளிவாசலுக்குள் அடக்கப்படவில்லை. நபியவர்களுக்குப் பின் ஆட்சிக்கு வந்த நான்கு கலீபாக்களின் காலம் முழுதும் மதீனாப் பள்ளிவாசல் வேறாகவும் நபியவர்கள் அடக்கம் செய்யப்பட்ட ஆஇஷா றழியல்லாஹுஅன்ஹா அவர்களின் வீடு வேறாகவுமே இருந்துவந்தது.

நான்கு கலீபாக்களுக்குப் பின் இஸ்லாமிய ஆட்சியை ஏற்ற உமையாக்களின் ஆட்சிக் காலத்தில் மதீனாவில் முஸ்லிம்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகியமையால் மதீனாப் பள்ளிவாசலை விஸ்தரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதற்கேற்ப மதீனாப் பள்ளிவாசல் விஸ்தரிக்கப்பட்ட போது நபியவர்கள் அடக்கம் செய்யப்பட்ட ஆஇஷா றழியல்லாஹுஅன்ஹா அவர்களின் வீடும் பள்ளிவாசலுக்குள் உள்வாங்கப்பட்டது. அவ்வாறு உள்வாங்கப்பட்டாலும் பள்ளிவாசலையும் நபியவர்களின் கப்ரையும் தனித்தனியாக பிரித்துக்காட்டக்கூடியவாறு பெரும் தடுப்புச் சுவர் போடப்பட்டது. இன்றும் கூட அத்தகைய தடுப்புச் சுவரைக் காண முடியும். எனவே நபியவர்கள் மதீனாப் பள்ளிவாசலுக்குள் அடக்கம் செய்யப்படவில்லை என்பதும் நபியவர்களின் கப்றும் மதீனாப் பள்ளிவாசலும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட அமைப்பிலேயே இருக்கின்றன என்பதும் நினைவில் கொள்ள வேண்டிய உண்மையாகும்.

ஆயினும் இன்றைய காலத்தில் பல முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள பல பள்ளிவாசல்களுக்குள்ளே கப்றுகள் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. சில பள்ளிவாசல்களைப் பொறுத்தவரை பள்ளிவாசலின் நடுப்பகுதியிலும் சில பள்ளிவாசல்களில் இமாம் தொழுகை நடாத்தும் மிஹ்ராபுக்கு முன்பாகவும் சில பள்ளிவாசல்களில் பின்பகுதியிலும் கப்றுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நபியவர்களின் கடுமையான எச்சரிக்கையின் பிரகாரம் இத்தகைய பள்ளிவாசல்களில் தொழுகை நடாத்த முடியாது. அவ்வாறு தொழுதால் அத்தொழுகை

நிறைவேறாது. சில வேளைகளில் பள்ளிவாசல் விஸ்தரிப்பின் போது வெளியிலிருக்கும் கப்றுகள் உள்வாங்கப்படுமாயின் மதீனாப் பள்ளிவாசலில் இருப்பது போன்று பள்ளிவாசலுக்கும் கப்றுக்கும் தொடர்பில்லாதவாறு இரண்டும் பிரிக்கப்பட வேண்டும்.

மற்றுமொரு விடயமும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். நபியவர்கள் கூறினார்கள்: உங்கள் வீடுகளில் (ஸுன்னத்தான) தொழுகைகள் சிலவற்றை தொழுதுகொள்ளுங்கள். வீடுகளை கப்றுகளாக மாற்றி விடாதீர்கள் (முஸ்லிம்). இந்த ஹதீஸை சற்று சிந்தித்துப் பார்க்கும் போது வீடுகளில் தொழுமாறும் வீடுகளை கப்றுகளாக மாற்றிவிட வேண்டாம் என்றும் கூறுவதன் மூலம் கப்றுகள் அமைந்திருக்கும் இடங்கள் தொழமுடியாத, தொழக்கூடாத இடங்கள் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

பள்ளிவாசல்களில் கப்றுகள் அமைப்பதை இமாம்கள் பலர் பெரும் பாவங்களுள் ஒன்று என அடையாளப் படுத்தியுள்ளார்கள். இமாம் ஷாபிஈ றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்: எந்தவொரு மனிதருடைய கப்றும் வணக்கஸ்தலமாக ஆக்கப்படும் அளவுக்கு கண்ணியப்படுத்தப்படக் கூடாது (பார்க்க: அல் உம்மு). ஷாபிஈ மத்ஹபின் முக்கிய இமாம்களுள் ஒருவரான இமாம் நவவி றஹிமஹுல்லாஹ் அவர்கள் தனது நூலில், பள்ளிவாசலில் கப்று அமைப்பது கடுமையான ஹராமாகும் என்று கூறுகிறார்கள் (பார்க்க : அல் மஜ்மூஃ). ஷாபிஈ மத்ஹபின் மற்றுமொரு முக்கிய அறிஞரான இமாம் இப்னு ஹஜர் அல்ஹைதமி அவர்கள் கூறும் போது, கப்ருகளை பள்ளிவாசல்களாக்குவது, கப்ருகளில் விளக்கேற்றி வைப்பது, அவற்றை வணக்கம் புரியும் இடங்களாக மாற்றுவது, அந்த கப்ருகளை முத்தமிடுவது, அவற்றை சுற்றிவருவது, அவற்றை நோக்கி தொழுவது ஆகிய அனைத்தும் பெரும் பாவங்களாகும் எனக் குறிப்பிடுகிறார்கள் (பார்க்க: அஸ்ஸவாஜிர் அனிக்திராபில் கபாஇர்).

அல்லாஹ்வினால் மன்னிக்கப்பட முடியாத மிகப் பெரும் பாவமான இணைவைத்தலுக்கு இட்டுச் செல்லுகின்ற இத்தகைய செயலை முற்றாகத் தவிர்ந்து வாழ்வதற்கு முஸ்லிமான ஆண்கள், பெண்கள் அனைவருக்கும் அல்லாஹ் அருள்புரிவானாக. அல்லாஹ்வே மிகவும் அறிந்தவன். மனிதர்கள் இணைவைப்பவற்றை விட்டும் அவன் தூய்மையானவன்.

**ஐயமும் தெளிவும்**

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

தவ்ஹீத் ஜமாஅத்,த.பெ. இல: 02, ஏறாவூர்

# நபிகளார் பலதார மணம் புரிந்தது ஏன்? 2

(கடந்த இதழின் தொடர்ச்சி...)

நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களை மிகக் கடுமையாக எதிர்த்து, அவர்களை தமது சொந்த மண்ணிலிருந்து விரட்டியதோடு கொல்வதற்குக் கூட பல தடவைகள் முயன்ற அவர்களது அன்றைய எதிரிகள் நபியவர்களை பைத்தியக்காரர், சூனியக்காரர், சந்ததியற்றவர் என்றெல்லாம் மோசமாக விமர்சித்தார்களேயன்றி, ஒரு போதும் காமுகர் என்றோ, காம வெறிபிடித்தவர் என்றோ கூறியதில்லை என்பது கூர்ந்து கவனித்தக்க விடயமாகும். நபியவர்களின் பிரசாரத்தை ஒரே இரவில் முறியடித்து அவர்கள் உருவாக்கி வைத்திருந்த மாபெரும் சமூகக் கட்டமைப்பை உடைத்தெறிவதற்கு நபியவர்களை காமுகர் என்று விமர்சித்திருந்தால் நபியவர்களுக்கு அது மிகப் பெரும் தோல்வியாக அமைந்திருக்கும். நபியவர்களை எப்படியாவது தோற்கடித்து விட வேண்டும் என தருணம் பார்த்துக்கொண்டிருந்த எதிரிகள் ஏன் இந்த ஆயுதத்தை கையிலெடுக்கவில்லை என்பது சிந்தித்துப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

நபியவர்களை தனது பக்கத்து வீட்டினராகக் கொண்ட எத்தனையோ எதிரிகள் அன்றிருந்தார்கள். தன் சொந்த சகோதரனைப் போன்று நபியை அறிந்து வைத்திருந்த அன்றைய எதிரிகள், நேருக்கு நேராக பல யுத்த களங்களில் நின்று நபியை எதிர்த்துப் போரிட்டவர்கள் ஏன் நபியைப் பற்றி இவ்வாறு ஒரு பிரசாரத்தை முன்னெடுக்கவில்லை என்றால், அவர்களுக்கு அவ்வாறு விமர்சிக்க தெரியாது என்பதல்ல, அவர்களால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

நபியவர்களின் அப்பழுக்கற்ற வாழ்க்கையை எதிரிகள் ஒவ்வொருவரும் அறிந்தே இருந்தார்கள். நபியவர்கள் பல பெண்களை மணம்புரிந்தமைக்கான பின்னணியையும், காரணிகளையும் அன்றைய எதிரிகள் நன்கறிந்திருந்தார்கள். பிற பெண்களை தேவையின்றி பார்ப்பதைக் கூட விபசாரத்தின் ஒரு பகுதி என்று போதித்த அவர்கள், அதற்கேற்ப தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்கள். திருமணம் முடிக்க முன்னரும் அதற்குப் பின்னரும் தனக்கு அனுமதியல்லாத பெண்களை ஏறெடுத்தும் பார்க்காத அவர்களுடைய பரிசுத்த வாழ்க்கையை விமர்சனம் செய்தால், அது எதிரிகளுக்கே தோல்வியாக அமையும் என்பது அவர்களுக்குத் தெரியும். ஏனெனில் அந்தளவுக்கு நபியவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை அனைவரும் அறிந்துகொள்ளத்தக்கவாறு திறந்த புத்தகமாகவே இருந்தது. நபியவர்களின் இஸ்லாமியப் பிரசாரத்தையே எதிர்த்த அன்றைய எதிரிகள், எவ்வாறு நபியவர்களின் ஒப்பற்ற நேர்மையிலும் நாணயத்திலும் அளவற்ற நம்பிக்கை கொண்டிருந்தார்களோ அவ்வாறே நபியின் தனிப்பட்ட வாழ்க்கையிலும் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு தேடினால் கூட அவர்களது ஒழுக்கத்தில், நடத்தையில் சந்தேகம் காண முடியாத அளவுக்கு அவர்களது வாழ்க்கை பரிசுத்தமானதாக இருந்தது.

நபியை நேருக்கு நேர் அறிந்திருந்த அன்றைய எதிரிகள் நபியின் பரிசுத்த வாழ்வு பற்றி தெரிந்திருந்தமையால் நபியவர்களை காமவெறியர் என்று ஒருபோதும் தூற்றவில்லை. ஆனால் நபி மரணித்து ஆயிரம் வருடங்கள் கழிந்த பின்பு வாழுகின்ற, நபியைப் பற்றி பூரணமாக அறிந்துகொள்ளாத இன்றைய எதிரிகள் நபியை காமுகராக (நஊது பில்லாஹ்... உள்ளம் நடுங்குகிறது) சித்தரிக்கிறார்கள் எனில், அதற்கான காரணத்தை நபியைப் பற்றி தேடித் தேடிப் படிக்கும் நம்மால் ஊகிக்க முடிகிறது.

1400 ஆண்டுகள் கடந்த பின்பும் அந்த ஒப்பற்ற தலைவரின் நாமம் இன்னும் ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கிறதே என்ற காழ்ப்புணர்வு, அவர் ஏந்தி வந்த இஸ்லாம் என்ற வாழ்க்கை நெறி நாகரிகத்தின் தொட்டில் எனக் கூறப்படும் ஐரோப்பாவில் மட்டுமல்ல, உலகின் அத்தனை நாடுகளிலும் மிக வேகமாகப் பரவி வருகிறதே என்ற எரிச்சல், இஸ்லாத்தை வாழ்க்கையாக வரித்துக்கொள்வோரின் எண்ணிக்கை நாளாந்தம் ஆயிரக் கணக்கில் அதிகரித்துவருகிறதே என்ற ஆத்திரம், குறுகிய காலத்தில் உலகமே இஸ்லாத்தின் குடையின் கீழ் ஐக்கியமாகி விடுமோ என்ற பேரச்சம்... இவைதான் கற்புக்கரசரான காருண்ய நபியை காமுகர் என்று சிந்திக்கச் செய்திருக்கின்றன

- இன்ஷா அல்லாஹ் தொடரும்

# உத்தம நபியின் உண்மைத் தோழர்கள்

## 1. உண்மையின் உறைவிடம்
## அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹு

இஸ்லாம் வருவதற்கு முன்னரும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பின்னரும் நபிகளாரின் உயிர்த் தோழராக வாழ்ந்து, உலகில் உயரிய நட்புக்கு இலக்கணமாக திகழ்ந்தவர்கள் அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள்.

யானை வருடத்திலிருந்து இரண்டரை வருடங்களுக்குப் பின் இவர்கள் பிறந்தார்கள். குறைஷ் வம்சத்தைச் சேர்ந்தவர். வெண்ணிறமும் அழகிய முகத் தோற்றமும் மெல்லிய உடலும் கொண்ட இவர்கள் இயற்கையாகவே மென்மையான சுபாவம் கொண்டவராக இருந்தார்கள். அபூகுஹாபா, ஸல்மா ஆகியோருக்கு மகனாகவும், கதீலா, உம்மு ரூமான், ஹபீபா, அஸ்மா ஆகிய பெண்மணிகளின் கணவராகவும் அப்துல்லாஹ், அப்துர் ரஹ்மான், முஹம்மத், ஆஇஷா, அஸ்மா, உம்மு குல்தூம் ஆகியோருக்கு தந்தையாகவும் இருந்த இந்த உண்மையாளர், நபியவர்கள் இஸ்லாத்தை ஏந்தி வந்த போது நபிகளாரின் நேர்மையிலும் நாணயத்திலும் கொண்ட நம்பிக்கை காரணமாக நபியவர்களை சற்றும் தாமதமின்றி இறைத்தூதர் என்று ஏற்று உண்மைப்படுத்தியதாலும், நபியவர்கள் ஓர் இரவில் ஏழு வானங்களையும் கடந்து சென்று அல்லாஹ்வை தரிசித்துவிட்டு திரும்பிய மிஃராஜ் பயணத்தை எவ்விதத் தாமதமுமின்றி உண்மைப் படுத்தியதாலும் பேருண்மையாளர் எனப் பொருள்படும் ஸித்தீக் என்ற பட்டப்பெயர் கொண்டு கௌரவமாக அழைக்கப்பட்டார்கள்.

ஆண்களில் முதன் முதலாக நபிகளாரின் கரம் பற்றி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர், நபியவர்களுக்குப் பின் உலக மனிதர்களிலேயே உயர்தர ஈமானைப் பெற்றவர், நபியவர்களுக்குப் பின் முதன் முதலாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டமைக்காக காபிர்களால் துன்புறுத்தப்பட்டவர், இஸ்லாத்தின் ஆரம்பகாலத்தில் நபியவர்கள் கஃபாவுக்குள் தொழுதுகொண்டிருந்த போது உக்பா என்பவன் தனது போர்வையால் நபியவர்களின் கழுத்தை இறுக்கிக் கொல்ல முனைந்த போது ஓடி வந்து முதன் முதலாக நபியவர்களைக் காப்பாற்றியவர், நபியவர்களுக்குப் பின் முதன் முதலாக பிறரை மார்க்கத்தின் பக்கம் அழைத்து, உஸ்மான், தல்ஹா, ஸுபைர், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப், அபூ உபைதா (றழியல்லாஹுஅன்ஹும்) போன்ற ஆரம்பகால ஸஹாபாக்கள் இஸ்லாத்தை தழுவக் காரணமாக இருந்தவர், இஸ்லாத்திற்காக முதன் முதலாக தன் பொருளாதாரத்தை வழங்கி உதவி புரிந்தவர் என்று பல முதன்மைச் செயல்களுக்குச் சொந்தக்காரர்.

ஒரு தடவை நபியவர்களும் அபூபக்ர், உமர், உஸ்மான் (றழியல்லாஹுஅன்ஹும்) ஆகியோரும் உஹுத் மலையில் ஏறினார்கள். உஹுத் சற்று அதிர்ந்தது. அப்போது நபியவர்கள், 'உஹுதே! அமைதியாயிரு. உன் மீது ஒரு நபியும் ஓர் உண்மையாளரும் இரு ஷஹீத்களும் நிற்கிறார்கள்' என்று கூறினார்கள் (புஹாரி). நபியவர்கள் உண்மையாளர் (ஸித்தீக்) என்று அபூபக்ர் அவர்களையும் ஷஹீத்கள் என்று மற்ற இரு ஸஹாபாக்களையும் குறிப்பிட்டார்கள். மற்றுமொரு தடவை நபியவர்கள், அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் சுவனத்தில் நுழைவதற்காக சுவர்க்கத்தின் அனைத்து வாயில்களாலும் அழைக்கப்படுவார் என்று குறிப்பிட்டார்கள் (புஹாரி, முஸ்லிம்).

அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் அதிக இறையச்சமுடையவர் என்று அல்லாஹ்வினாலேயே அல்குர்ஆனில் வர்ணிக்கப்படுகிறார்கள் (92 : 17).

எந்த நற் செயலாயினும் அதைச் செய்வதில் பிறரை விட அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹுமுந்திக்கொள்வார்கள். ஒரு தடவை நபியவர்கள் கூடியிருந்த ஸஹாபாக்களைப் பார்த்து, 'இன்றைய தினம் உங்களில் யார் நோன்பாளி?' என்று கேட்ட போது அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் 'நான்' என்றார்கள். மீண்டும் நபியவர்கள், 'இன்றைய தினம் ஜனாஸாவைப் பின்தொடர்ந்து சென்றவர் யார்?' என்ற போது அதற்கும் அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் 'நான்' என்றார்கள். நபியவர்கள் மீண்டும் 'இன்றைய தினம் ஓர் ஏழைக்கு உணவளித்தவர் யார்?' என்ற போது அதற்கும் நான் என்றார்கள் அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள். மீண்டும் நபியவர்கள், 'இன்று நோயாளியைத் தரிசித்தவர் உங்களில் யார்?' என்று கேட்ட போது அதற்கும் அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் 'நான்' என்று கூறினார்கள். இறுதியாக நபியவர்கள் கூறினார்கள்: 'இந்த அனைத்து நற்காரியங்களும் யாரிடம் ஒன்றுசேர்ந்திருக்கின்றனவோ அவர் சுவர்க்கம் நுழைந்திடுவார்' (முஸ்லிம்).

நபிகளார் மரணித்தவுடன் ஸஹாபா சமூகமே அதிர்ச்சியில் உறைந்து போய் செய்வதறியாது திகைத்து தட்டுத் தடுமாறிய போதும், நபியவர்கள் மரணிக்கவில்லை, அவர்கள் மூஸா நபி இறைவனுடன் உரையாடச் சென்றது போல் அல்லாஹ்வுடன் உரையாடச் சென்றிருக்கிறார்கள் என்று உமர் றழியல்லாஹுஅன்ஹுபோன்ற ஸஹாபாக்கள் நம்பிக்கொண்டிருந்த போதும், நபியவர்கள் மரணித்துவிட்டார்கள் என்ற விடயத்தை அந்த சமூகத்தின் முன் அல்குர்ஆன் வசனங்களை ஆதாரமாகக் கொண்டு ஆணித்தரமாக எடுத்துக் கூறி, ஏற்படவிருந்த மிகப் பெரும் குழப்பத்தை தடுத்ததும், பின்னர் நபியவர்களை எந்த இடத்தில் அடக்கம் செய்வது என்ற பிரச்சினை ஏற்பட்ட போது, நபிமார்கள் எந்த இடத்தில் மரணித்தார்களோ அந்த இடத்திலேயே அடக்கப்பட வேண்டும் என்ற நபியவர்களின் கூற்றை நினைவுபடுத்தி மீண்டும் ஒரு குழப்பத்தை தடுத்து நிறுத்தியதும், மாநபியின் மரணத்தின் பின் ஸஹாபாக்கள் பல பிரிவினராக பிரிந்துவிடக் கூடிய ஆபத்து ஏற்பட்ட போது தாம் இஸ்லாமிய ஆட்சிப் பொறுப்பையேற்று நபிகளாரின் வழியில் நல்லாட்சி புரிந்து இஸ்லாத்தின் கண்ணியத்தைப் பாதுகாத்ததும் இந்த அபூபக்ர் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள்தான்.

இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன் பெரும் வணிகராகத் திகழ்ந்த இவர்கள், அல்லாஹ்வின் அளப்பெரும் அருளில் நம்பிக்கை கொண்டு இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக கலீபாவாக ஆவதற்கு முன்னரும் கலீபாவானதன் பின்னரும் தமது பொருளாதாரத்தை வாரிவழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தார்கள். இதனால் இவர்கள் மரணிக்கும் தறுவாயில் பொருளாதாரம் எதையும் சேமித்துவைக்காத நிலையிலேயே ஹி. 13ம் ஆண்டு தனது 63வது வயதில் மரணித்தார்கள். அல்லாஹ் அவர்களைப் பொருந்திக்கொள்வானாக.

**ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு ஸஹாபியை எதிர்பாருங்கள், இன்ஷாஅல்லாஹ்.**

ஏறாவூரில்
CGS
இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk
உங்களது கணனி திருத்துவது சம்பந்தமான பிரச்சினையா?
சேவைகள்
01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues
இன்றே அழையுங்கள் 0772300420
கணனி மற்றும் மடிக்கணனி
(DESKTOP / LAPTOP)
திருத்தம் செய்தல்



# “இஸ்லாத்திற்கு வழிகாட்டியது பைபிள்...”

சகோதரர் யூஷா எவன்ஸ் (Yusha Evans), இருபத்தொன்பது வயது இளைஞரான இவர், இஸ்லாத்திற்கு வந்த கடந்த பன்னிரண்டு வருடங்களில் செய்த பணிகள் இன்றியமையாதவை. மாதம் இருவராவது இவரது த.்.வா பணியால் இஸ்லாத்தை தழுவி வருகிறார்கள். பல்கலைக்கழகங்களால் விரும்பி அழைக்கப்படும் நபர்களில் ஒருவராய் இருக்கிறார்.

இன்றைய இளைய தலைமுறை முஸ்லிம்களுக்கு பெரும் உத்வேகமாய் இருக்கக்கூடிய இவர் மனோதத்துவம் பயின்றவர். இவர் 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் கலிபோர்னியாவில் "How the Bible Led me to Islam" என்ற தலைப்பில் தான் இஸ்லாத்திற்கு வந்த விதம் பற்றி கூறிய கருத்துக்கள் இங்கே உங்கள் பார்வைக்காக.

அந்த சொற்பொழிவு சுமார் ஒன்றரை மணி நேர ஒன்று. முழுவதுமாக இங்கே எழுதினால் மிக நீண்ட பதிவாகிவிடும் என்பதால் சில வி'யங்கள் விடப்படுகின்றன.

”நான் தெற்கு கரோலினாவின் Greenville பகுதியைச் சேர்ந்தவன். சிறிய வயதிலேயே என் தாய் எங்கள் குடும்பத்தை விட்டு வெளியேறிவிட்டார். என் தந்தையோ இரண்டு வேலைகளில் இருந்தார். அதனால் நான் என் பாட்டன்-பாட்டி கவனிப்பில் தான் வளர்ந்தேன். மிகுந்த கட்டுப்பாடு உள்ள குடும்பம். அதிக கடவுள் நம்பிக்கை உடையவர்களும் கூட.

நான் கிறிஸ்தவத்தை (Methodist church) விரும்பி என்னை அதனுடன் இணைத்துக் கொண்டவன். 12-13 வயதில் என்னை தேவாலய இளைஞர் சேவைகளில் இணைத்துக் கொண்டேன்.

அப்போது எனக்கு பதினைந்து வயதிருக்கும். என் நெருங்கிய நண்பருக்கு பதினேழு வயதிருக்கும். அவர் பாரம்பரியமிக்க பொப் ஜோன்ஸ் பல்கலைகழகத்தில் (Bob Jones University) புத்தக ஆராய்ச்சி படிப்பில் சேர்ந்திருந்தார். அப்படியென்றால், ஒரு நூலை எடுத்து, அது எங்கிருந்து வந்தது, யார் எழுதினார்கள் என்பது போன்ற விடயங்களை ஆராய்வது.

ஒருமுறை அந்த நண்பர் கேட்டார், ”நீ பைபிளை படித்திருக்கிறாயா? ” எனக்கு ஆச்சர்யம், ”அதைத் தானே நாம் தேவாலயங்களில் செய்து கொண்டிருக்கிறோம்” ”இல்லை இல்லை நான் கேட்பது, நீ பைபிளை முழுவதுமாக படித்திருக்கிறாயா, முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரை...”. நாங்கள் பைபிளை அங்கொன்றும் இங்கொன்றுமாக படித்தவர்கள். முழுவதுமாக படித்தவர்கள் என்று எனக்கு தெரிந்து யாரும் கிடையாது. புரிந்தது, அதைத்தான் அவர் கேட்கிறார். அவர் தொடர்ந்தார், ”பைபிள் இறைவனின் வார்த்தைகள் என்று சொல்லக்கூடிய நாம் அதை ஏன் முழுமையாக படிக்க முயலவில்லை” அவருடைய கேள்வி என்னை மிகவும் யோசிக்க வைத்து விட்டது. ஆம் அவர் கேட்பது நியாயம்தான். பிறகு அவர் கூறினார், ”நாம் ஏன் பைபிளை முழுமையாக படிக்கத் துவங்கக்கூடாது? ”

அவர் அவ்வாறு கேட்டதும், முழுவதுமாக படித்து விடுவோம் என்று "Genesis" எனப்படும் பழைய ஏற்பாட்டின் முதல் புத்தகத்தில் (The first book of Old Testament) இருந்து துவங்கினேன். அதிர்ச்சிகள் பல காத்திருந்தன... ஏற்றுக்கொள்ள முடியாத அதிர்ச்சிகள். நான் என் வாழ்க்கைக்கு எடுத்துக்காட்டாய் கொண்டிருந்த நபிமார்களா இவர்கள்? உதாரணத்துக்கு, பைபிள், நூஹ் நபி அவர்கள் குடிகாரராக இருந்ததாக குறிப்பிடுகிறது. லூத் நபி மற்றும் தாவூத் நபி அவர்களைப் பற்றியெல்லாம் சொல்ல முடியாத வார்த்தைகளால் வர்ணிக்கப்பட்டிருந்தது. இந்த நபிமார்களின் நல்ல தன்மைகளையே பாதிரியார்கள் எங்களுக்கு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உள்ளே போய் படித்துப் பார்த்தால் என்னென்னவோ இருக்கிறது. நபிமார்கள் இறைவனின் நற்செய்தியை கொண்டு வந்தவர்கள் அல்லவா? அவர்கள் தானே நமக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டும்? அவர்களைத்தானே நாம் வாழ்விற்கு எடுத்துக்காட்டாக கொள்ள வேண்டும்? ஆனால் இங்கே அவர்களே பெரும் தவறு செய்பவர்களாக இருக்கிறார்களே...இதை எப்படி என்னால் ஏற்றுக்கொள்ள முடியும்? எப்படி இவர்களை பார்த்து என் வாழ்வை அமைத்துக்கொள்ள முடியும்? புரியவில்லை. மிகுந்த அதிர்ச்சி. பழைய ஏற்பாடு முழுவதும் இப்படி பல முரண்பாடுகள். என் பாஸ்டரிடம் சென்று கேட்டேன். அதே பதில், எல்லா பாஸ்டர்களும் சொல்லுவார்களே, ”இது நம்பிக்கை சம்பந்தபட்ட விடயம், கடவுளை உள்ளூர உணர வேண்டும், கேள்வியெல்லாம் கேட்கக்கூடாது”... அதையேதான் அவரும் கூறினர். ”சரி, நீ புதிய ஏற்பாட்டை (New Testament) படி, அதுதான் ஜீசஸ் (இயேசு) பற்றி பேசுகிறது”. சரியென்று புதிய ஏற்பாட்டை படிக்க ஆரம்பித்தேன்.

-இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்-

## தொடரும் இஸ்ரேலின் கொடூரம்

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக பல்வேறு துன்ப, துயரங்களை அனுபவித்து வரும் பலஸ்தீன் மக்கள் கடந்த வாரத்திலிருந்து மீண்டும் இஸ்ரேலின் கொடூரமான, மனிதாபிமானமற்ற தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். பலஸ்தீனின் காஸா நகரத்தின் 350 இடங்கள் மீது இஸ்ரேல் கடந்த வாரம் தொடக்கம் Operation Pillar of Defense என்ற பெயரில் தொராக மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதலினால் இதுவரை பலஸ்தீன சிறுவர், சிறுமியர் அடங்கலாக 19 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 200ஐத் தாண்டிள்ளது. இத்தாக்குதலில் ஹமாஸ் இயக்கத்தின் இராணுவத் தளபதிகளுள் ஒருவரான அஹ்மத் அல் ஜ.்.பரி என்பவரும் கொல்லப்பட்டுள்ளார்.

இத்தாக்குதல் குறித்து ஒரு பலஸ்தீனிய குழந்தை பின்வருமாறு கூறியுள்ளது : “எங்களுக்கு மேலாக ரொக்கட்டுகள் உலா வரலாம். ஆனால் அவற்றுக்கும் மேலாக அல்லாஹ் இருக்கிறான் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள்”.

**(“The rockets may be above us, but they have forgotten ALLAH is above them”)**


CGS
College for Tech Studies
இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

**இம்முறை A/L எழுதிய மாணவர்களுக்கான கணனி வகுப்புக்கள் எதிர்வரும் செப்டம்பர் 03ம் திகதி முதல் ஆரம்பமாகும்.**

**CGS இன் கணனி கற்கை நெறிகள்**

* Diploma in Personal Computer Based Application Packages
* Diploma in Computer Hardware
* Diploma in Web Designing
* Diploma in Computer Networking & Administration
* Professional Diploma in AutoCAD, MEP and Architecture
* Computer for Kids

# பெறுமதியான கடிகாரப் பரிசை வென்று தரும் ஐந்து கேள்விகள்

1. நான்கு புனிதமான மாதங்களும் எவை?
2. நபியவர்கள் எங்கே அடக்கம் செய்யப்பட்டார்கள்?
3. அதிக இறையச்சமுடையவர் என்று அல்லாஹ்வினால் வர்ணிக்கப்படும் ஸஹாபி யார்?
4. தொழுகையில் நபியவர்கள் தடைசெய்த இரு இருப்புகளும் எவை?
5. அனைத்து நபிமார்களினதும் பிரதான பிரசாரம் எதுவாக இருந்தது?

---

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **14.12.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம் இடம் பெறுபவருக்கு பெறுமதியான கடிகாரப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை அனுப்பும் போது தொ.பே இலக்கத்தையும் குறித்தனுப்பினால் பரிசில்களை வீடு வந்து சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். (ஆயினும் அத் தொ. பே இலக்கங்கள் அடுத்த இதழில் வெளியிப்படமாட்டா.) அல்லது தெரிவுசெய்யப்படுவோர் 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :

**தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

## *கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:*

**முதலாம் இடம்:** AM. பாதிமா அஜீபா, தைக்கா வீதி, ஏறாவூர் 01

**இரண்டாம் இடம் :** சமீனா அன்ஸார், பஸீர் சேகுதாவூத் வாசிகசாலை வீதி, ஐயங்கேணி

**மூன்றாம் இடம்:** RF. ஸஜீறா, மாவடி வீதி, ஏறாவூர் 01

**பாராட்டைப் பெறுவோர்:**

1. MLF. அஸ்மறா, மௌலானா வீதி, ஏறாவூர் 03
2. MAF. முன்தஷிறா, காதியார் வீதி, ஏறாவூர் 06D
3. MLA. ஆஷிக், RDS. வீதி, மிச்நகர், ஏறாவூர்
4. MA. பாதிமா முப்லிஹா, காதியார் வீதி, ஏறாவூர் 06D
5. MIM. ஹனான், பழைய சந்தை வீதி, ஏறாவூர் 03

## கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள்

1. ஐயாமுத் தஷ்ரீக்
2. உழ்ஹிய்யா
3. ஸூறா மாஇதா
4. அமெரிக்கா
5. கைகளை நிலத்தில் ஊன்றி எழும்புவார்கள்


மாதம் தோறும் கடிகாரப்பரிசை வழங்குவோர்

ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் அமைந்துள்ள

**யூரோ போன் வேர்ல்ட்**

இல.17, பிரதான வீதி, ஏறாவூர்

Fax: 065 2240283



> Mobile Phones
> Phone Accessories

Mobile Phone Repairing

Dialog

மாதாந்த கட்டணப் பட்டியல் (Dialog Bill) மின்சாரப் பட்டியல் இங்கே செலுத்த முடியும்.



மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை (குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.





☺ கொம்பியூட்டர் எக்ஸசரிஸ்
☺ இன்டெர்நெட் டொங்கள்
☺ அன்டி வைரஸ், கேம்ஸ் மற்றும் கொம்பியூட்டர் சொப்ட்வெயார் சிடிகள்

**ஆர்-டெல் கொமியுனிகேஷன்**



சகலவிதமான மொபைல் போன்கள், மொபைல் போன்களின் உதிரி பாகங்கள் என்பன உத்தரவாதத்துடனும் நியாய விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்

☺ மின்சார பட்டியல் கட்டணம் (CEB)
☺ டயலொக், எயார்டெல் பட்டியல் கட்டணம் (மொபைல், TV, இன்டெர்நெட்)
☺ மோட்டார் சைக்கில், ஆட்டோ, ஹேன் டிரக்டர் என்பவற்றிற்கான லைசன்ஸ் இன்சுரன்ஸ் (அமானா தகாபுல்)

என்பன எவ்வித கட்டண கழிவுமின்றி உடனுக்குடன் மேற் கொள்ளலாம்

R-tel COMMUNICATION

ஏ.ஆர்.எம் ஹாஜி கட்டிடம், பிரதான வீதி ஏறாவூர் - 03. (பழைய பொம்பே பசார் எதிரில்)

COMPUTER ACCESSORIES MOBILE PHONE & ACCESSORIES TEL: 065 22 400 33 / 077 877 22 00